

**Tha Mo Anbarasan**

1h ·

சென்னை, லயோலா கல்லூரி சார்பில் நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் – கல்வியாளர் கலந்துரையாடல் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போது..

அருகில் லயோலா கல்லூரி முதல்வர் திரு.தாமஸ், லயோலா கல்லூரி நிர்வாகி திரு.பிரான்சிஸ் சேவியர், மத்திய தொழில் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் திரு.கே.ஜெ.ஸ்ரீராம் உள்ளிட்டோர் உள்ளனர்.










முரசொலி



சென்னை, லயோலா கல்லூரி சார்பில் நடைபெற்ற தொழில் நிறுவனங்கள் - கல்வியாளர்கள் கலந்துரையாடல் மாநாட்டில் தமிழக குறு -சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் லயோலா கல்லூரி முதல்வர் தாமஸ், லயோலா கல்லூரி நிர்வாகி பிரான்சிஸ் சேவியர், மத்திய தொழில் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் கே.ஜெ. ஸ்ரீராம் உள்ளிட்டோர் உள்ளனர்.

## தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்க

# படிப்பை முடித்துவிட்டு இளைஞர்கள் தொழில்களை தொடங்க முன்வாருங்கள்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் அழைப்பு!

சென்னை, டிச.4-

தமிழகத்தின் தொழில் வளத்தை பெருக்கி, தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல படிப்பை முடித்து விட்டு இளைஞர்கள் தொழில்களை தொடங்க முன்வாருங்கள் என்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை, லயோலா கல்லூரி சார்பில் தொழில் நிறுவனங்கள் - கல்வியாளர் கலந்துரையாடல் மாநாடு லயோலா கல்லூரி கூட்டரங்கில் கல்லூரி முதல்வர் தாமஸ் தலைமையில் நடைபெற்றது.

யோடு - தமிழக அரசின் தொழில் நிறுவனங்களின் உதவியுடன் ஸ்மார்ட் 40 என்ற அமைப்பை நிறுவ உள்ளது.

இந்த அமைப்பு தொழில் நிறுவனங்களுக்கும் - கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக செயல்படும். இந்த அமைப்பின் மூலம் ஆராய்ச்சி மாணவர்கள் - கல்லூரி மாணவர்கள் - தொழில் நிறுவனங்கள் பயன் பெறுவார்கள்.

தமிழகத்தை தொழில் துறையில் முதல் மாநிலமாக ஆக்குவதே தமிழக முதல்வரின் நோக்கமாகும்.

தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற 6 மாத காலத்தில் தமிழக முதல்

15 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

கொரோனவால் பாதிக்கப்பட்டுள்ள குறு - சிறு - நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்டெடுக்க தமிழக முதல்வர் முதலீட்டு மானியம் வழங்க இந்த நிதியாண்டில் ரூ.280 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதுவரை 2256 நிறுவனங்களுக்கு ரூ.192 கோடி மானிய தொகை வழங்கப்பட்டுள்ளது.

**வல்லுநர் குழு!**

தமிழ்நாட்டில் MSME நிறுவனங்கள் புத்துயிர் பெறுவதற்கான வழிகளை ஆராய்ந்து பரிந்துரைக்க, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அலுவலர் சுந்தர

நீங்கள் வேலைக்கு செல்லுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை வேலை கிடைக்கவில்லை என்று உங்கள் இளமைக் காலத்தை வீணடிக்காதீர்கள்.

இளைஞர்கள் அனைவரும் படித்து முடித்து விட்டு வேலை ! வேலை என்று தேடி செல்லாமல் தொழில்களை தொடங்க முன் வாருங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன். அத்துடன் புதிய கருவிகளை கண்டு பிடித்து தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசி

## தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்க

# படிப்பை முடித்துவிட்டு இளைஞர்கள் தொழில்களை தொடங்க முன்வாருங்கள்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் அழைப்பு!

சென்னை, டிச.4-

தமிழகத்தின் தொழில் வளத்தை பெருக்கி, தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல படிப்பை முடித்துவிட்டு இளைஞர்கள் தொழில்களை தொடங்க முன்வாருங்கள் என்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை, லயோலா கல்லூரி சார்பில் தொழில் நிறுவனங்கள் - கல்வியாளர் கலந்துரையாடல் மாநாடு லயோலா கல்லூரி கூட்டரங்கில் கல்லூரி முதல்வர் தாமஸ் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் லயோலா கல்லூரி நிர்வாகி பிரான்சிஸ் சேவியர், மத்திய தொழில் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கே.ஜெ. ஸ்ரீராம், கல்லூரி துணை முதல்வர் மெல்கியாஸ் கேபிரியல், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :

புதிய தொழிற்சாலைகள் தொடங்க தொழில் நிறுவனங்களின் பங்களிப்பையும், கல்வி நிறுவனங்களின் பங்களிப்பையும் ஊக்குவிக்கும் வண்ணம் லயோலா கல்லூரி - சார்பில் இன்று ஒரு நாள் தொழில் நிறுவனங்கள் - கல்வியாளர் கலந்துரையாடல் மாநாட்டை சிறப்பாக நடத்துகிறது.

இம்மாநாட்டில் மாணவர்கள் - கண்டுபிடிப்பாளர்கள் - கார்ப்பரேட் நிறுவனங்கள் - MSME தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு சிறப்பித்து உள்ளனர்.

### ஸ்மார்ட் 4.0

லயோலா கல்லூரி ஒன்றிய அரசின் துணையோடு - தமிழக அரசின் தொழில் நிறுவனங்களின் உதவியுடன் ஸ்மார்ட் 40 என்ற அமைப்பை நிறுவ உள்ளது.

இந்த அமைப்பு தொழில் நிறுவனங்களுக்கும் - கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக செயல்படும். இந்த அமைப்பின் மூலம் ஆராய்ச்சி மாணவர்கள் - கல்லூரி மாணவர்கள் - தொழில் நிறுவனங்கள் பயன் பெறுவார்கள்.

தமிழகத்தை தொழில் துறையில் முதல் மாநிலமாக ஆக்குவதே தமிழக முதல்வரின் நோக்கமாகும்.

தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற 6 மாத காலத்தில் தமிழக முதல்வர் அவர்கள் 3 முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி தமிழகத்தில் தொழில் வளம் பெருக நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு என்ற பெயரில் 3 முதலீட்டாளர் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி ரூ.83,177 கோடி மதிப்பிலான 155 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு அதன் மூலம் 2,17,544 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உள்ளது.

தமிழகத்தில் படித்த இளைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்க தமிழ்நாடு அரசு 3 வகையான மானியத்துடன் கூடிய கடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### நீட்ஸ் திட்டம்!

12-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க ரூ.5 கோடி வரை கடன் வழங்கும் நீட்ஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு 25 சதவீதம் மானியம் அதிகபட்சம் ரூ.75 லட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி நிறுவனங்களுக்கு ரூ.25 லட்சம் வரை சேவை - வியாபார நிறுவனங்களுக்கு ரூ.10 லட்சம் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 15 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

கொரோனவால் பாதிக்கப்பட்டுள்ள குறு - சிறு - நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்டெடுக்க தமிழக முதல்வர் முதலீட்டு மானியம் வழங்க இந்த நிதியாண்டில் ரூ.280 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதுவரை 2256 நிறுவனங்களுக்கு ரூ.192 கோடி மானிய தொகை வழங்கப்பட்டுள்ளது.

### வல்லுநர் குழு!

தமிழ்நாட்டில் MSME நிறுவனங்கள் புத்துயிர் பெறுவதற்கான வழிகளை ஆராய்ந்து பரிந்துரைக்க, ஓய்வு பெற்ற ஐஏஎஸ். அலுவலர் சுந்தரதேவன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை, மருந்துப் பொருட்கள் உற்பத்தி, மின் வாகன உற்பத்தி போன்ற துறைகளில் தலா ரூ.100 கோடி மதிப்பீட்டில் பெரும் தொழில் குழுமங்கள் அமைக்கப்பட உள்ளது.

தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்காக செங்கல்பட்டு - திருவள்ளூர் - திருச்சி - மதுரை - கோவை ஆகிய மாவட்டங்களில் ரூ.277 கோடி மதிப்பீல் 7 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட உள்ளன.

புதிய முதலீட்டாளர்கள் தொழில் துவங்குவதற்கு உதவிட - தேவையான அனைத்து அனுமதிகளையும் எளிதாகவும், விரைவாகவும் பெறுவதற்கு வசதியாக 24 துறைகளை, 112 சேவைகளை கொண்ட ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

இக்கல்லூரியில் படிக்கும் இளைஞர்களுக்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன்.

படித்து முடித்த பின் மாணவர்களே நீங்கள் வேலைக்கு செல்லுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை வேலை கிடைக்கவில்லை என்று உங்கள் இளமைக் காலத்தை வீணடிக்காதீர்கள்.

இளைஞர்கள் அனைவரும் படித்து முடித்துவிட்டு வேலை ! வேலை என்று தேடி செல்லாமல் தொழில்களை தொடங்க முன் வாருங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன். அத்துடன் புதிய கருவிகளை கண்டுபிடித்து தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.